யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் அரசறிவியல் துறை
மற்றும் அரசறிவியல் துறை
பழைய மாணவர் ஒன்றியம் ஏற்பாட்டில்

"இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு பற்றிய உரையாடல்"

## தொடர் - 3

# தமிழ் மக்கள் பேரவை மற்றும் வடக்கு மாகாண சபை முன்வைத்த தீர்வு யோசனைகள்

- பேராசிரியர் கே.ரி.கணேசலிங்கம்-

அனுசரணை
சமூக விஞ்ஞான ஆய்வு மையம்
2023

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

யாழ்ப்பாண பல்கலைக்கழக அரசறிவியல் துறையும், அரசறிவியல் துறை பழைய மாணவர் ஒன்றியமும் இணைந்து "இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு பற்றிய உரையாடல்" என்ற தலைப்பில் தொடர் கருத்தரங்கு தொடரை நடாத்தி வருகின்றது. இக் கருத்தரங்கு தொடர் உரைகளை நூலாக்கம் செய்யும் பணியில் சமூக விஞ்ஞான ஆய்வு மையத்தினராகிய நாம் ஈடுபட்டு வருகின்றோம்.

இதுவரை பேராசிரியர் கே.ரி.கணேசலிங்கத்தின் "இனப்பிரச்சினை சார்ந்து அரசியல் தீர்வுக்கான வாய்ப்பும் யதார்த்தமும்" என்ற உரையின் தொகுப்பும், பதின்மூன்றாவது திருத்தம் அரசியல் தீர்வின் ஆரம்பப் புள்ளியா? என்ற தலைப்பில் அரசியல் ஆய்வாளர் சி.அ.யோதிலிங்கம் ஆற்றிய உரையின் தொகுப்பும் நூல்களாக வெளிவந்திருக்கின்றன.

தற்போது கருத்தரங்கு தொடரின் மூன்றாவது நூலாக பேராசிரியர் கே.ரி.கணேசலிங்கம் தமிழ் மக்கள் பேரவையும் வடக்கு மாகாண சபையும் முன்வைத்த தீர்வு யோசனைகள் என்ற தலைப்பில் ஆற்றிய உரையின் தொகுப்பு வெளிவருகின்றது.

தமிழ் மக்கள் பேரவையின் தீர்வு யோசனைகள் சிவில் பிரதிநிதிகளும் இணைந்து தயாரித்த தீர்வு யோசனைகள் என்ற வகையில் முக்கியத்துவம் பெறுகிறது. சுயநிர்ணய சமஸ்டி ஆட்சி முறையினையே வலியுறுத்துகின்றது.

அரசியல் தீர்வு தொடர்பான உரையாடல் நடைபெறுகின்ற இக் காலகட்டத்தில் அது தொடர்பான புரிதலைப் பெறுவதற்கு இந்நூல் பெரிதும் உதவும் என நம்புகின்றோம்.

வாசகர்கள் சமூக விஞ்ஞான ஆய்வுமையத்தின் ஏனைய நூல்களுக்கு தந்தஆதரவு போல இதற்கும் தருமாறு தாழ்மையாக வேண்டுகின்றோம்.

நன்றி

**சி.அ.யோதிலிங்கம்**
இயக்குநர்
**சமூக விஞ்ஞானஆய்வு மையம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்கள் பேரவை மற்றும் வடக்கு மாகாண சபை முன்வைத்த தீர்வு யோசனைகள்

## அறிமுகம்:

2009களுக்கு பின்னரான சூழலை எதிர்கொள்ளும் விதத்தில் தமிழ் மக்கள் எழுச்சிகரமான போராட்டங்கள் நியாயமான கோரிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு முன்னெடுத்து வருகின்றனர். போர்க்குற்ற அநீதிக்கான பொறுப்புக்கூறல் உள்ளிட்ட பல்வேறு விடயங்களையும் அரசாங்கம் தமிழ்மக்களது வாழ்விடங்கள் மீதும் உரிமை மீதும் எடுத்துவரும் ஆக்கிரமிப்புகளை சர்வதேச மட்டத்திற்கு தெரியப்படுத்தும் விதத்திலும் தொடர்ந்தேற்சியாக போராட்டங்களை நடாத்தி வருகின்றனர். இவ்வாறானதொரு சூழலில் 27 டிசம்பர் 2015 ஆம் ஆண்டு தமிழ் மக்கள் பேரவையானது தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு ஒன்றினை முன்மொழியுமாறும் மக்கள் மத்தியில் கலந்தாய்வு செய்து அறிக்கையினை தருமாறும் ஓர் உபகுழு நியமிக்கப்பட்டது. அதன் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட முடிபுகளை 10 ஏப்ரல் 2016ஆண்டு ஆவணம் வெளியிடப்பட்டது.அவ்வாறே வடக்குமாகாண சபையும் 22 ஏப்ரல் 2016 அன்று மாகாணசபை உறுப்பினர்கை ளபிரதிநிகளாகக் கொண்டு தயாரித்த ஆவணத்தினை முதலாவது மாகாணசபையின் 51 வது அமர்வில் அங்கீகரிக்கப்பட்டு வெளியிட்டது. இரண்டுமே ஒரேகாலப் பகுதியில் தயாரிக்கப்பட்டு இலங்கை அரசாங்கத்திற்கும் சர்வதேச நாடுகளுக்கும் முன்னிலைப்படுத்தப்பட்ட ஆவணமாகவே உள்ளது. தமிழ் மக்களின் அபிலாசைகளை வெளிப்படுத்தும் விதத்தில் தயாரிக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டதாக அமைந்துள்ளது.

முதலில் தமிழ் மக்கள் பேரவையினால் முன்வைக்கப்பட்ட தீர்வு யோசனையினது உள்ளடக்கத்தினையும் அதன் மீதான உரையாடல்களையும் வெளிக் கொணர்வதாக அமையவுள்ளது.

## அரசியல் உடன்படிக்கை

தமிழ் மக்கள் பேரவையின் தீர்வு யோசனையில் முதன்மையானதும் தனித்துவமானதாகவும் காணப்படும் விடயமாக அரசியல் உடன்படிக்கை விளங்குகிறது. அதனடிப்படையில் அரசியலமைப்பு ஆக்கமுயற்சிக்கு முன் சம்பந்தப்பட்ட தரப்புக்களுக்கிடையில் உடன்படிக்கை ஒன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைச்சாத்திடப்படவேண்டியது அவசியமாகும். அதில் தமிழர் தேசம் என்ற அங்கீகாரம், தமிழரின் சுயநிர்ண யஉரிமை, இறைமை, கூட்டாட்சி அதிகாரம், பாரம்பரிய தாயகம் ஆகியன உள்ளடக்கமாக கொள்ளப்பட வேண்டும். திம்பு உடன்படிக்கையை முதன்மைப்படுத்தும் தமிழ் மக்கள் பேரவையின் தீர்வு முன்மொழிவுகள் அதன் பிரகாரம் அரசியல் உடன்படிக்கையினையும் வடிவமைக்க முயன்றுள்ளது. அதுமட்டுமன்றி பொறுப்புக்கூறல், நீதி அரசியல் கைதிகள் விடுதலை,இராணுவத்தின் கட்டுபாட்டிலுள்ள காணிகளை விடுவித்தல், காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினைக்கு தீர்வு, இராணுவ நீக்கம், அரசால் திட்டமிட்டு செய்யப்பட்ட குடியேற்றங்கள், பாதுகாப்புத் துறை மறுசீரமைப்பு, குற்றங்கள் மீள நிகழாமை தொடர்பான உறுதியளிப்பு என்பன உடன்பாட்டில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்களாக கொள்ளப்பட்டன. இத்தகைய உடன்பாட்டின் செய்முறையை பலப்படுத்தும் விதத்தில் இவ்வுடன்படிக்கை மூன்றாம் தரப்பொன்றால் உத்தரவாதமளிக்கப்பட வேண்டும் என முன்மொழிவில் உள்ளடக்கியுள்ளது. அதில் அமெரிக்கா, இந்தியா மற்றும் ஐக்கியநாடுகள் சபையினால் உத்தரவாதப்படுத்தப்பட வேண்டும் என்பதை குறிப்பிட்டுள்ளது.

அரசியலமைப்பு ஏற்பாட்டுக்கான வரைபு முன்மொழிவுகள் எனும் உப தலைப்பின் இலங்கை அரசின் தன்மை பற்றி விவாதிக்கப்படுகிறது. இலங்கை ஓர் பல் தேசிய, மொழித்துவ, கலாசார, மத அரசாகும் என வரையறுத்துள்ளது. சிங்களவர், தமிழர், முஸ்லீம்கள், மலையகத் தமிழர் மன்றும் ஏனைய சமூகங்கள் பல் தேசிய இலங்கையை உருவாக்குகின்றன எனக் குறிப்பிட்டுள்ளது. வடக்கு கிழக்கு மாகாணம் தமிழர்களின் பாரம்பரிய தாயகமாக இருக்கும். தமிழ் மக்கள் பாரதீனப்படுத்தப்பட முடியாத சுயநிர்ணயத்திற்கு உரித்துடையவர்கள். சுயநிர்ணய உரிமையை ஏற்று அங்கீகரிக்கும் இடத்து ஐக்கிய இலங்கை அரசிற்கு தமிழ் மக்கள் தமது பற்றுறுதியை வெளிப்படுத்துவர் எனவும் வரைபு குறிப்பிடுகின்றது.

இறைமை எனும் பிரிவின் கீழ் தனித்துவமான தேசங்களுக்கு உரித்துடையதாகவும் பாரதீனப்படுத்த முடியாததுமாகும். முழு சமஷ்டி அரசின் இறைமையானது அதன் அங்கத்துவ தேசங்களின் அலகுகளிலிருந்து உய்த்தறியப்படுவதாகும். சட்டவாக்க இறைமையானது மத்திய பாராளுமன்றத்தாலும் மாநில சட்டவாக்க அவையாலும் நிறைவேற்று அதிகார இறைமையானது மத்திய அரசாங்கத்தின் பிரதம மந்திரியாலும் மாநிலஅரசாங்கத்தின் முதலமைச்சரினாலும் நீதித்துறை இறைமையானது அரசியலமைப்பு நீதிமன்றத்தாலும் மத்திய மாநில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதித்துறையாலும் அவற்றுக்கு விதந்துரைக்கப்பட்ட நியயாதிக்கங்களுக்கு ஏற்றவாறு பிரயோகிக்கப்படும். அதுமட்டுமன்றி அரசியலமைப்பில் குறித்தொதுக்கப்பட்ட அதிகாரங்கள் மூலமாக பிரயோகிக்கப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. விதந்துரைக்கப்படும் அடிப்படை உரிமைகள் யாவற்றையும் மத்திய மாநிலஅரசாங்கங்கள் மதித்து பாதுகாத்து மக்களால் அனுபவிப்பதற்கு உறுதி செய்தல் வேண்டும். அரசியலமைப்புக்கு புறம்பாக மத்திய மாநில அரசாங்கங்கள் அடிப்படை உரிமைகளை சுருக்கவோ, குறுக்கவோ நிராகரிக்கவோ, மட்டுப்படுத்தவோ முடியாது. வாக்குரிமை 18 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் உரித்துடையதாகும். மீயுயர் தத்துவம் அரசியலமைப்புக்கு உரியது என வரைபு குறிப்பிட்டுள்ளது.

மொழி, மதம், பிரஜாவுரிமை மற்றும் அடிப்படை உரிமை எனும் பகுதியானது இலங்கை ஒரு மதச்சார்பற்ற குடியராகும் என வரையறுத்துள்ளது. அரசு அனைவரினதும் விரும்பிய மதத்தை பின்பற்றுவதற்கான உரிமையை மதிப்பதோடு எல்லா மதங்களையும் சரிசமமாக நடாத்துதல் எனக் குறிப்பிட்டுள்ளது. சிங்களம் தமிழ் அரசின் உத்தியோகபூர்வமான மொழியாகவும் ஆங்கிலம் இணைப்பு மொழியாகவும் இருப்பதுடன் தமிழ் வடக்கு கிழக்கில் நீதிமன்ற மொழியாகவும் பொது ஆவணங்களின் மொழியாகவும் இருக்கும். .அனைத்து பிரஜைகளும் தமது மொழியில் நீதி நிர்வாக சேவையை பெற்றுக் கொள்வதற்கு உரித்துடையவர்களாவார். சுதந்திரத்தின் போது இயல்பான வதிவிடமாக கொண்ட அனைவரும் அவர்களின் வழித்தோன்றல்களும் இலங்கையில் பிரஜா உரிமைக்கு உரித்துடையவர்களாவார்.

ஆட்சி முறைமையானது இலங்கை ஒரு சமஷ்டி குடியரசு என வரைபு குறிப்பிட்டுள்ளது. அது மத்திய மாநிலஅரசாங்கங்கள் இருக்கும் எனவும் வடக்கு கிழக்கு ஒரு மாநிலமாக விளங்கும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. சமஷ்டி அரசின் ஜனாதிபதி பாராளுமன்ற இரு அவைகளதும் மாநிலங்களின் அவையின் உறுப்பினர்களைக் கொண்ட தேர்தல் கல்லூரியினால் தெரிவு செய்யப்படுவார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. நான்கு வருட பதவிக் காலத்தைக் கொண்ட ஆட்சியானது அரசியலமைப்பு பேரவை ஒன்றைக் கொண்டிருக்க வேண்டும் என பதிவிட்டுள்ளது.

வடக்கு கிழக்கில் வாழும் சிங்களவர்கள், முஸ்லீம்கள் மற்றும் மலையகத் தமிழர் தொடர்பில் அரசியலமைப்பு விதிகளையும் வடகிழக்கு மாநிலத்திலுள்ளஉரிமைகளையும் அனுபவிக்க உரித்துடையவர்கள் என்பதோடு அவர்களது முன்வைப்புகளை ஆதரிப்பதாகவும் குறிப்பிட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்தியில் பகிரப்பட்ட ஆட்சி எனும் தலைப்பின் கீழ் இரண்டாவது அவை அமைக்கப்படுவதுடன் அது அனைத்து மாநிலங்களுக்கும் சமமான பிரதிநிதித்துவத்தைக் கொண்டதாக விகிதாசார அடிப்படையில் ஒன்பது உறுப்பினர்களை செனற் சபை ஊடாக தெரிவு செய்யும் எனக் குறிப்பிட்டுள்ளது. ஒவ்வொரு சட்ட மூலமும் ஜனாதிபதிஅங்கீகாரத்திற்கு முன்பு கீழவை மற்றும் செனற் சபையால் அங்கீகரிக்கப்பட வேண்டும். செனற் சபையால் நிராகரிக்கப்படும் பட்சத்தில் அது சட்டமாகாது.

மாநில ஆளுநர் முதலமைச்சரின் ஆலோசனையின் பெயரில் ஜனாதிபதியால் நியமிக்கப்படுவார். அவரது பதவியானது அவசரகால பிரகடனப்படுத்தப்பட்ட சந்தர்ப்பம் தவிர்ந்த காலத்தில் சம்பிரதாயபூர்வமானதாக அமைந்திருக்கும். ஆளுநன் மாநில அவையில் பெரும்பான்மை பெறும் ஒருவரை முதலமைச்சராக தெரிவு செய்வார். முதலமைச்சர் மாநில அமைச்சர்களை நியமிப்பார். அரசியலமைப்பு அதிகாரங்களை மீறி செயல்படும் போது மாநிலஅரசு ஒரு குற்றப் பிரேரணை மூலம் பதவி நீக்க கோரலாம்.

மத்திய மாநில அரசுகளின் அதிகாரங்கள் இரு நிரலாக பிரிக்கப்பட்டு அதிகாரம் பகிரப்பட்டுள்ளது. காணிஅதிகாரம் அரச காணிகள் அனைத்தும் மாநிலத்திற்கு உரித்தாகும் எனக் குறிப்பிட்டுள்ளது. மத்தியரசு கைப்பற்றியுள்ள காணிகள் மாநிலத்திற்கு கையளிப்பது போல் தனியார் காணிகள் தனியாரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். மாநிலத்திற்கு உட்பட்ட காணி விடயங்கள் அனைத்தும் கையாளும் பூரண உரித்து மாநிலங்களுக்கு உள்ளது.

உள்ளூராட்சி சபைகளின் கட்டமைப்பு அதிகாரம் தொடர்பிலான் சட்டங்களை மாநிலங்கள் இயற்றும். உள்ளூராட்சி மன்றங்கள் மாநிலங்களுக்கு பொறுப்புக் கூற வேண்டும்.

பொலிஸ் மற்றும் சட்ட ஒழுங்கானது மாநிலங்களுக்கு உரியதாகும். சில விதிவிலக்குகளை மத்தியஅரசு மேற்கொள்ளலாம் எனக் குறிப்பிட்டுள்ளது.

வெலளியுறவு மத்திய அரசுக்குரியதாக உள்ள போதும் மாநில விடயம் ஒன்றினை பற்றிய தீர்மானங்களை மேற்கொள்ளும் போது மாநிலஅரசு அதில் பங்கெடுக்கும். வடக்கு கிழக்கு பொருளாதார கல்வி கலாசார நலன்களை ஊக்குவிக்கும் வகையில் தூதராலயங்களை, உயர் ஸ்தானிகராலயங்களை உருவாக்கிக் கொள்ள முடியும்.

பொதுச் சேவைகள் பொறுத்து பிரதம செயலாளர், முதலமைச்சர் செயலாளர், அமைச்சு செயலாளர்கள்,முதலமைச்சரால் மாநிலஅமைச்சரவையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலோசனையின் பெயரில் நியமிக்க முடியும். மாநில பொதுச் சேசை ஒன்று அமைக்கப்படும். மாநில பொதுச்சேவை ஆணைக்குழுவானது மாநிலங்களின் ஆட்சேர்ப்பு முதல் ஒழுக்காற்று நடவடிக்கை வரையும் மேற்கொள்ளும் அதிகாரம் கொண்டுள்ளது. மாநிலத்திற்கு உட்பட்ட அனைத்து நிர்வாக கட்டமைபபினது நடவடிக்கைகள் அவ் ஆணைக்குழுவால் மேற்கொள்ளப்படும். மத்திய பொதுச் சேவைக்கும் பாதுகாப்பு படைகளுக்கும் ஆட்சேர்ப்பு இனவிகிதாசார அடிப்படையில் நிகழும்.

கல்வி மாநிலத்திற்கு பாரப்படுத்தப்பட வேண்டும். இதில் ஆரம்ப பாடசாலை முதல் பல்கலைக்கழகங்கள் வரை மாநிலத்திற்கு உரியதாகவேணடும்.

மத்திய மாநிலஅரசுகளுக்கிடையிலான பிணக்குகளைத் தீர்ப்பதற்கு அரசியலமைப்பு நீதிமன்றங்களுக்குஉரித்துடையதாகும். நீதித்துறையானது ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு மேல்முறையீட்டு நீதிமன்றம் ஒன்று காணப்படுவதுடன் மத்திய அரசின் உயர் நீதிமன்றம் மேல்முறையீட்டின் இறுதி நீதிமன்றமாகவிளங்கும். மாநிலத்திற்கு ஒரு நீதிச்சேவை ஆணைக்குழுவென்று மாநிலஅரசியலமைப்பின் பிரகாரம் அமைக்கப்படும்.

மாநிலத்திற்குள்ளான அரசாங்கப் பதவிகள் நியமனங்கள் சுயாதீனமானதாக இருப்பதை உறுதிப்படுத்த மாநிலஅரசியலமைப்புச் சபை ஒன்று அமைக்கப்படும் என் வரைபு குறிப்பிட்டுள்ளது. அத்துடன் மாநில சட்டமாஅதிபர் ஒருவர் மாநில அரசியலமைப்புச் சபையால் பரிந்துரைக்கப்படுபவர் நியமிக்கப்படுவார்.

அவசரகால அதிகாரம் எனும் பகுதியின் கீழ் மாநிலம் ஒன்று பிரிவதற்கான நடவடிக்கையில் ஈடுபடும் போது ஆளுநர் மாநில நிறைவேற்று அதிகாரத்தை எடுத்துக் கொள்ளலாம் எனவும் ஒரு மாதத்திற்கு மேல் நீடிக்கப்படக் கூடாது எனவும் குறிப்பிட்டுள்ளது.

மத்திய மாநில மற்றும் மாநில அரசுகளுக்கிடையிலான ஒத்துழைப்பு எனும் பகுதியின் கீழ் விசேட சபை ஒன்று ஏற்படுத்தப்பட்டு அரசியலமைப்பின் பிரகாரம் ஒத்துழைப்பு ஏற்படுத்தப்படவேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கு மாநில ஆட்சிக்கு சில விசேட நடைமுறைகள் பின்பற்றவேண்டும் எனவும் வரைபு குறிப்பிட்டுள்ளது. மாநில சட்டசபையிலும் அமைச்சரவையிலும் பெண்கள் 3.:1 பங்கு ஆசனம் ஒதுக்கப்படவேண்டும். முதலமைச்சர் தவிர்ந்த 14 அமைச்சர்களைக் கொண்டதாக அமைச்சரவை இருப்பதுடன் பிரதிஅமைச்சர் ஒத்த பெயரையுடைய அமைச்சர்கள் இடம்பெற மாட்டார்கள் என்பதை வரைபு குறிப்பிட்டுள்ளது. சாதிய வேறுபாடு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலஞ்ச ஊழல் தொடர்பிலான சட்ட மூலங்களும் விசாரணைக்குரிய ஆணைக்குழுக்களும் அமைக்கப்படவேண்டும் என வரைபு குறிப்பிட்டுள்ளது,

வடக்கு மாகாண சபையின் வரைபுகளின் உள்ளடக்கத்தை நோக்குவது அவசியமானதாக உள்ளது. இலங்கை ஒரு சுயாதீனமான குடியரசாகும் என்பதுடன் மாநிலஅரசுகளின் ஒன்றியமாக அமையவுள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாநில அரசும் தன்னாட்சிப் பிராந்தியமாகவும் சுவிஸ்லாந்து நாட்டின் கன்ரன்கள் அமைப்பைக் கொண்டிருக்க வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளது. இலங்கை ஒரு மதச்சார்பற்ற சமஷ்டிக் குடியரசு. பாராளுமன்ற அரசாங்கமாகும். குடியரசு ஜனாதிபதி தேர்தல் கல்லூரியினால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளது. மக்கள் பிரதிநிதிகள் சபை செனற் சபை என இரு அவைகளைக் கொண்ட பாராளுமன்றமாக திகழும் எனவும் வரைபு குறிப்பிட்டுள்ளது. முஸ்லீம்கள், மலையகத் தமிழர்கள் மற்றும் தமிழர்களை கொண்டதாக மேற்சபை அமைய வேண்டும். அரசியலமைப்பு மீயுயர் மேலாண்மை கொண்டதாகவும் அரசியலமைப்பு நீதிமன்றம் உருவாக்கப்பட வேண்டும் எனவும் வரைபு முன்மொழிந்துள்ளது.

இலங்கையின் அரசகரும மொழி மற்றும் தேசிய மொழியாக சிங்களமும் தமிழும் இருப்பதுடன் ஆங்கிலம் இணைப்பு மொழியாக இருத்தல் வேண்டும் என வரைபு குறிப்பிடுகிறது. சகல பிரஜைகளும் சமமாக நடத்தப்படுவதுடன் இன விகிதாசார அடிப்படையில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளது. தேசியக் கொடியானது மக்கள் பிரிவுகளை பிரதிபலிக்கக் கூடாது எனவும் தேசியகீதமானது இரு மொழிகளிலும் பாடப்பட வேண்டும் எனக் கூறுகிறது.

மாநில எல்லைக்குட்பட்ட நிலம் முழுவதும் மாநில அரசுக்குரியதாகும். மாநில அரசாங்கத்தின் அனுமதியின்றி அந்த நிலத்தின் மீது சமஷ்டி அரசாங்கம் அதிகாரத்தை பிரயோகிக்க முடியாது. மாநிலங்களுக்கு முழுமையான பொலிஸ் அதிகாரம் வழங்கப்படல் வேண்டும்.

பயங்கரவாதச் சட்டம் நீக்கப்பட்டு மீளவும் குடியியல் சட்டம் நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும். படைக்குறைப்பு படைக்கலைப்பு மற்றும் மீளவொருங்கமைத்தல் செய்முறையானது மேற்கொள்ளப்பட வேண்டும்.

சிறுபான்மை இனத்தவர் பாதுகாப்பு ஏற்பாடுகள் அவசியம் எனவும் கலப்புத் தேர்தல் முறைமை உருவாக்கப்பட வேண்டும் எனவும் 19 ஆம் திருத்தத்திற்கு அமைவாக சுயாதீன ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட வேண்டும் எனவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரைபு தரப்பட்டுள்ளது. சட்டத்தின் ஆட்சியும் அதிகார வேறாக்கமும் உறுதி செய்தல் அவசியம் எனக் குறிப்பிடுகிறது.

அதிகாரப்பகிர்வு வடக்கு கிழக்கு தனியான மாநிலமாகவும் அதற்குள் முஸ்லீம்கள் சுயாதீன பிரதேசத்தைக் கொண்டதாவும் வடக்கு கிழக்கு தவிர்ந்த மலையக சுயாதீன பிராந்தியத்தை உள்ளடக்கிய ஏழு மாகாணங்களைக் கொண்டதாக அமையவுள்ளது என குறிப்பிட்டுள்ளது.

ஒவ்வொரு மாநில அரசிலும் பாராளுமன்றம் அமைச்சரவை இருத்தல் வேண்டும். அதன் பதவிக் காலம் ஐந்து வருடங்களாகும். சமஷ்டி அரசின் பிரதிநிதி ஒருவர் முதலமைச்சர் மற்றும் அரசியலமைப்புச் சபையின் ஆலோசனையின் பிரகாரம் ஜனாதிபதி மாநிலங்களுக்கு நியமிப்பார்.

நிதி சார்ந்து மாநிலங்களுக்கு தனியாக திரட்டிய நிதியிருத்தல் வேண்டும். மாநிலங்கள் அவசரகால நிதியம் ஒன்றை அமைக்க முடியும். மாநிலங்கள் மத்திய நிதிஅமைச்சகத்திற்கு அறிவித்தலுடன் சர்வதேச கடன் தொடர்புகளைப் பெற்றுக் கொள்ள முடியும். தேசிய நிதி ஆணைக்குழுவொன்று மாநிலத்திற்கான நிதி ஒதுக்கத்தை மேற்கொள்ள அமைக்கப்படும்.

மாநில பொலிஸ் சேவையானது மாநில பொலிஸ்மா அதிபரின் கீழ் இயங்கும். சட்டம் ஒழுங்குக்கு பொறுப்பானவராகவும் மாநில பாராளுமன்றத்திற்கு பொறுப்புடையவராகவும் விளங்குவார்.

மாநில நீதிச் சேவையானது ஆரம்ப நீதிமன்றம் நீதிவான் நீதிமன்றம் மாவட்ட நீதிமன்றம் மாநில நீதிமன்றம் மற்றும் மாநில மேல் முறையீட்டு நீதிமன்றம் என்ப அமைவதுடன் சமஷ்டி நீதிமன்றமே அதியுயர் நீதிமன்றமாக விளங்கும்.

சமஷ்டி அதிகாரப் பட்டியல் மாநில அதிகாரப் பட்டியல் என்பன வரையறுக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் தேசிய பாதுகாப்பு, தேசிய நிதி, வெளி விவகாரம், பொருளாதாரம், சர்வதேச மற்றும் மாநிலங்களுக்கிடையிலான விமானப் போக்குவரத்து, சமஷ்டி புகையிர சேவை, சர்வதேச கடல்சார் போக்குவரத்து, தபால் தொலைத் தொடர்பு, தேசிய ஊடகம் போதைப் பொருள் சார் விதிகள், அணுசக்தி, ஆட்புல கடல் எல்லைகள், தேசிய ஆவணக் காப்பகம் மற்றும் சமஷ்டி சிறைச்சாலைகள் என்பன அடங்கலாக 14 அதிகாரங்கள் சமஷ்டிக்குரியதெனவும் மாநிலங்களுக்கு 42 அதிகார அலகுகள் உரித்துடையதெனவும் வரையறுக்கப்பட்டுள்ளது. குறிப்பாக பொது நிர்வாகம், சட்டம் ஒழுங்கு, உள்ளூராட்சி, கிராமிய அபிவிருத்தி, காணி, நிதி, ஆட்புல கடல்பரப்பு, கடலோரப் பாதுகாப்பு, காடுகள், மாநில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்கைக்குட்பட்ட துறைமுகங்கள் விமான சேவைகள், கப்பல் போக்குவரத்து, புகையிரதப் போக்குவரத்து என்பனஅடங்கலான அதிகாரங்கள் மாநிலத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

## முடிவுரை

இரு வரைபுகளும் சில தனித்துவங்களைக் கொண்டிருந்தாலும் ஒரே மாதிரியான இயல்புகளை அதிகம் உள்ளடக்கியுள்ளது. அதற்கு அடிப்படையில் இரு வரைபுகளும் சமகாலத்தில் முன்வைக்கப்பட்டதுடன் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் இரு வரைபுகளிலும் அதிக பங்கு வகித்திருந்தமை கவனத்திற்குரியதாகும். இருந்தபோதும் தமிழ் மக்கள் பேரவையின் வரைபு மிகத் தெளிவாக அமைந்திருப்பதுடன் இரு வரைபுகளிலும் மீளமைக்கப்பட வேண்டிய விடயம் அதிகமாக உள்ளது. வடக்கு மகாண சபையின் வரைபில் அதிக முரண்பாடுகள் காணப்படுவதையும் கவனத்தில் கொள்வது அவசியமானது. ஆனால் முழுமையாக தமிழ் மக்கள் பேரவையின் வரைபின் உள்ளடக்கம் மத்திய அரசுடன் அதிகாரத்தை பகிர்வதில் தெளிவு காணப்பட்டாலும் உள்ளக தன்மைகளில் அதிக விடயங்கள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். முஸ்லீம்கள் சார்ந்தும் மலையகத் தமிழர் சார்ந்தும் முன்வைக்கப்பட்டுள்ள விடயங்களில் வடக்கு கிழக்கு மாநிலத்தினை விட மத்திய அரசுக்கே உரியதாகும். ஈழத் தமிழருக்கு அதிகாரம் இல்லாதபோது எவ்வாறு முஸ்லீம்களதும் மலையகத் தமிழரதும் அதிகார அலகுகளைப் பற்றி தீர்மானம் எடுப்பது மட்டுமன்றி இரு பிரிவினரும் தமது சுயநிர்ணயத்தை இலங்கை அரசிடமிருந்தே பெற்றுக் கொள்ளவேண்டும் என்பது தவிர்க்கமுடியாத நிலையாகவுள்ளது. இவை இரு பிரிவினரும் தனித் தேசியங்களாக கருதுமாயின் அதற்கான கோட்பாட்டு யதார்த்தம் அத் தேசியங்களுக்கு உரியதாக இருக்குமாயின் அதற்கான கோரிக்கைகளும் நியாயமானதாக அமையும். அதனை இலங்கை அரசிடமிருந்தே அத் தேசியங்கள் போராடிப் பெறவேண்டும். வடக்கு கிழக்கு இணைப்பு பற்றி முஸ்லீம் தரப்பு கருத்துக் கூற முடியாது. அது தமிழரின் பாரம்பரிய தாயகம். அவ்வாறே முஸ்லீம் தரப்பின் இருப்புப் பற்றி தமிழ் தரப்பு கருத்துக் கூற முடியாது மட்டுமன்றி அதனை முஸ்லீம் தரப்பிடமே விட்டுவிட வேண்டும். அவர்கள் ஈழத்தமிழருடன் இருப்பது பற்றியோ அல்லது சிங்கள மக்களுடன் அதிகாரத்தை பகிர்வது பற்றியோ அவர்கள் தீர்மானிக்கும் உரிமம் உடையவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பின்னிணைப்பு - I

தமிழ் மக்கள் பேரவையின் தேசிய இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வை கண்டடைவது தொடர்பிலான அறிக்கையின் அதிகார பகிர்வு தொடர்பான உள்ளடக்கங்கள்:

### 5. ஆட்சிமுறைமை

5.1. இலங்கை ஓர் சமஷ்டி குடியரசாக இருக்கும்.

5.2. அதில் இரண்டு மட்டத்திலான அரசாங்கம் இருக்கும்: மத்தி மற்றும் மாநிலம்.

5.3. சமஷ்டியின் கூறுகளாக மாநிலங்கள் இருக்கும். அத்தகைய மாநிலங்களில் ஒன்றாக தற்போதைய 1978 அரசியலமைப்பில் சொல்லப்பட்டுள்ள வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை கொண்ட . வடக்கு கிழக்கு மாநிலம் அமையப் பெறும்.

5.4. மத்திய அரசாங்கமானது வெஸ்ட்மினிஸ்ரர் முறையிலான ஆட்சி முறையில் இருத்தல் வேண்டும்.

5.5. அரசாங்கத்தின் இரு மட்டத்திலும் உள்ள தேர்தல் முறைகள் ஜெர்மனியில் இருப்பது போன்ற கலப்பு தேர்தல் முறையை பின்பற்றியதாக இருக்க வேண்டும்.

5.6. சமஷ்டி அரசின் சனாதிபதி பாராளுமன்றின் இரண்டு அவைகள் மற்றும் மாநிலங்கள் அவையின் உறுப்பினர்களைக் கொண்ட தேர்தல் கல்லூரியொன்றினால் தெரிவு செய்யப்படுவார்.

5.7. தத்தமதுசட்டவரையறைகளின் ஊடாக மாநிலங்கள் தமது ஆட்சிமுறைகளை சமஷ்டி அரசியலமைப்போடு முரண்படாத வகையில் உருவாக்கிக் கொள்ளலாம்.

5.8. 1978 அரசியலமைப்பின் 17ஆவது திருத்தத்தை ஒட்டிய அரசியலமைப்பு பேரவை ஒன்று இருத்தல் வேண்டும்.

**குறிப்பு:**

அ) வடக்கு கிழக்கில் வாழும் முஸ்லிம் சமூகத்தின் அரசியல் தனித்துவத்தை நாம் ஏற்றுக் கொள்கிறோம். முஸ்லிம் சமூகத்தால் இணைந்த வடக்கு கிழக்கில் தமது குழு சார் உரிமைகளை நிறுவன ரீதியாக பாதுகாப்பதற்கு எடுக்கும் முன்வைப்பு எதுவாயினும் அது தொடர்பில் அவர்களுடன் கலந்தாய்வு செய்யத் தயாராக இருக்கின்றோம் என பற்றுதியுடன் கூறிக் கொள்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ) வடக்கு கிழக்கில் வாழும் சிங்கள பிரஜைகள் யாவரும் அரசியலமைப்பில் உள்ள உரிமைகள் யாவற்றினையும் வடக்கு கிழக்கில் அனுபவிக்கும் உரித்துடையவர்கள் ஆவர். மேலும் வடக்கு கிழக்கு மாநிலத்தால் மேலதிகமாக வழங்கப்படும் மனித உரிமைப் பாதுகாப்பு அவர்களுக்கும் உரித்துடயதாக இருக்கும்.

இ) அதேவேளையில் தமது வாழ்விடங்களில் அவர்களது ஒன்றுபட்ட அக்கறையை பாதுகாப்பதற்கான அமைப்புமுறைசார் உரிமைகளுக்கான வழிமுறைகளை நோக்கிய மலையகத் தமிழர்களின் உரிமைகளுக்கான எமது அர்ப்பணிப்பை நாம் வெளிப்படுத்துகின்றோம். இவ்விடயம் தொடர்பில் மலையக அரசியல் கட்சிகளுடனும் சிவில் சமூகங்களுடனும் வேலை செய்வதற்கு நாம் முழுமையாக எம்மை அர்ப்பணிக்கின்றோம்.

## மத்திய மட்டத்திலான பகிரப்பட்ட ஆட்சி

### மாநிலநிரல்

1. காணி
2. சுகாதாரமும் சுதேச மருத்துவமும்
3. உயர்கல்வி, பல்கலைக்கழகங்கள் உள்ளடங்கலாக கல்வியும் கல்விச் சேவைகளும்
4. கமத்தொழிலும் கமநல சேவைகளும்
5. நீர்ப்பாசனம்
6. விலங்கு வேளாண்மை
7. கண்டமேடு மற்றும் பொருளாதாரவலயம் உள்ளிட்ட வரலாற்று நீர்ப்பரப்புகள் மற்றும் ஆள்புல நீர்ப்பரப்புக்கள் உள்ளடங்கலான கரையோர வலயங்களுடன் தொடர்புபட்ட மீன்பிடித் தொழில், கனிப்பொருள்கள், சுரங்கங்கள் உள்ளடங்கலான பொருளாதார வளங்கள்.
8. மாநிலத்திற்குள்ளான வனங்கள், சரணாலயங்கள் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு
9. கைத்தொழில்களும் கைத்தொழில் அபிவிருத்தியும்
10. எரிபொருள், மின்சாரம் மற்றும் மின்வலு வழங்கல்
11. சுரங்கங்களும் கனியவளங்களும் குவாரிகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. போக்குவரத்து
13. மாநிலகணக்கெடுப்பும் புள்ளிவிபரவியலும்
14. விமானநிலையங்களும் துறைமுகங்களும் இறங்குதுறைகளும்
15. ஆறுகளும் நீர்நிலைகளும்
16. வீதிகளும் பெருந்தெருக்களும்
17. வீடமைப்பும் நிர்மாணத்துறையும்
18. நகர திட்டமிடலும் அபிவிருத்தியும்
19. கிராமியஅபிவிருத்தி
20. உள்ளூராட்சிமன்றங்கள்
21. கூட்டுறவுகள்
22. மாநிலத்திற்குள்ளான உணவு விநியோகமும் பகிர்ந்தளிப்பும்
23. சுற்றுலாத்துறை ஊக்குவிப்பு
24. பொதுஆற்றுகைகள் உள்ளடங்கலாக கலாச்சாரச் செயற்பாடுகளை ஒழுங்கமைத்தல்,
25. தொலைக்காட்சி உள்ளடங்கலான ஒலிபரப்பும் ஊடகமும்
26. நிவாரணங்கள், புனர்வாழ்வு, புனர்நிர்மாணம்
27. சமூகப் பாதுகாப்பு
28. காவல்துறையும் சட்டமும் ஒழுங்கும். (மீன்பிடி உரித்துகளையும் மீட்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்கும் கரையோர வளங்களை பாதுகாக்கும் பொருட்டும் காவல்துறை ஒரு கரையோரப் பாதுகாப்பு பிரிவொன்றை ஸ்தாபிக்க முடியும்)
29. சீர்திருத்தும் நிலையங்கள் மற்றும் சிறுவர் நன்னடத்தை நிறுவனங்களின் நிர்வாகம்
30. மாநில பொதுச்சேவைகள்
31. விளையாட்டுத்துறை
32. மாநிலத்திற்குள்ளான கூட்டிணைக்கப்படாத சங்கங்களையும் மன்றங்களையும் ஒழுங்குபடுத்தல்
33. மாநிலத்தின் கடன்
34. உள்நாட்டு மற்றும் சர்வதேச கடன் மற்றும் உதவி பெறுதல் (சர்வதேச கடன் பெறுதலின்போது குறித்த வரையறையை மீறும் பட்சத்தில் மத்தியின் ஒருங்கியைவு தேவைப்படும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

35. மாநிலத்துக்கான வெளிநாட்டு நேரடி முதலீடு, சர்வதேச நன்கொடைகள், அபிவிருத்திக்கான உதவிகளை ஒழுங்குபடுத்தலும் ஊக்குவித்தலும்.

36. மாநில நிதி மற்றும் கடன் நிறுவனங்கள்

37. மதுவரி தீர்வைகள்

38. பிராந்தியத்தின் மொத்த மற்றும் சில்லறை விற்பனைகள் மீதான விற்பனைப் புரள்வு வரிகள் பெறுமதி சேர்க்கப்பட்ட வரிகள்.

39. தேசிய லொத்தர்கள் தவிர்ந்த பந்தய வரிகளும்,பரிசுப் போட்டிகளும்,லொத்தர்களும் மீதான வரிகள்.

40. மோட்டார் வாகன உரிமம் மற்றும் கட்டணங்கள்.

41. மோட்டார் வாகன மற்றும் ஆதன விற்பனைகள் மீதான முத்திரைக் கட்டணம்.

42. நீதிமன்றங்களினால் அறவிடப்படும் தண்டப் பணங்கள்

43. நீதிமன்றங்களுக்கு சமர்ப்பிக்கப்படும் ஆவணங்கள் மீதான முத்திரைக் கட்டணம் உள்ளடங்கலாக நீதிமன்ற கட்டணங்கள்.

44. இறைவரியினை மதிப்பிடுதல், அறவிடுதல் உள்ளடங்கலான காணி வரி அறவீடு மற்றும் வரி அறவிடும் நோக்கங்களுக்காக காணி பதிவேடுகளை பேணுதலும்.

45. கனிப்பொருள் உரிமைகள் மீதான வரிகள்.

46. மாநில கணக்காய்வு

47. மாநிலநிரலில் குறித்துரைக்கப்பட்டவிடயங்கள் தொடர்பில் சட்டங்களை ஆக்குதல்.

48. மாநில நிரலில் குறித்துரைக்கப்பட்ட விடயங்கள் தொடர்பிலான தண்டப்பணம்

49. மாநில மட்டத்திலான திட்டமிடல்

50. மாநிலத்துக்கான சட்ட சபை மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள்

51. தொல்பொருள் மற்றும் பாரம்பரிய அமைவிடங்கள், நூதனசாலைகள், சுவடிகள்

52. மாநிலத்துக்குள்ளான நிர்வாகம்

53. மாநிலத்துக்குள்ளான நீதி நிர்வாகம்

54. மாநில திரட்டு நிதியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மத்தியநிரல்**

1. பாதுகாப்பு, மத்திய பந்தோபஸ்து மற்றும் ஆயுதப் படைகள்.
2. மத்திய புலனாய்வுத் திணைக்களம் சமஷ்டி நிரலுக்குட்பட்ட எல்லா விடயங்கள் தொடர்பிலான காவல்துறை அதிகாரங்கள்.
3. குடிவரவு, குடியகல்வு
4. வெளிவிவகாரங்கள்
5. தேசிய குடிசன மதிப்பும் புள்ளிவிபரமும்
6. நாணயமும் வெளிநாட்டு நாணய மாற்றும், சர்வதேச பொருளாதாரத் தொடர்புகள் நாணயக் கொள்கை.
7. மத்திய அரசுக்கான பொதுக்கடன்கள்
8. மத்திய அரசுக்கான வெளிநாட்டுக் கடன்கள்
9. வங்கி மற்றும் நிதியில் நிறுவனங்களின் ஒழுங்குபடுத்தல்கள்.
10. காப்புறுதி
11. பங்குப் பரிவர்த்தனையும் எதிர்காலச் சந்தை வாய்ப்பும்
12. மத்திய அரசின் கணக்காய்வு
13. தனியாட்களினதும் கம்பனிகளினதும் கூட்டுத்தாபனங்களினதும் வருமானம் மூலதனம் செல்வம் என்பவற்றின் மீதான வரிகள்.
14. மாநில வரிகள் தவிர்ந்த மத்தியஅரசுக்கான மொத்த விற்பனை வரவு வரிகளும் பெறுமதி சேர்க்கப்பட்ட வரிகளும்
15. இறக்குமதி ஏற்றுமதி தீர்வைகள் உள்ளிட்ட சுங்கத் தீர்வைகள்
16. மத்திய அரசினால் அல்லது மத்திய திரட்டு நிதியினால் செலுத்தப்படக் கூடிய ஓய்வூதியம்
17. அணுசக்தி
18. தேசிய மின் உற்பத்தி பராமரிப்பும் முகாமைத்துவமும்
19. சர்வதேச போக்குவரத்து மத்திய அரசின் போக்குவரத்து மற்றும் மத்திய அரசின் புகையிரதப் போக்குவரத்தும்
20. விமானப் போக்குவரத்து
21. மத்திய அரசின் அதிவேக நெடுஞ்சாலைகள்
22. கடலோர வலயம் தொடர்பிலான கடலோரப் பாதுகாப்பு வரலாற்று நீர்ப்பரப்புகள், ஆட்புல நீர்ப்பரப்புகள் உள்ளடங்கலாக பொருளாதார



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலயங்கள் கண்ட மேடுகள் உள்ளடங்கலாக, சர்வதேச கப்பற் தொழிலும் கப்பல் போக்குவரத்தும்

23. மத்திய அரசுக்கான தேர்தல்கள்

24. தபால் மற்றும் தொலைத்தொடர்புகள்

25. மத்திய அரசின் பொதுச்சேவைகள் மற்றும் மத்தியஅரசின் பொதுச்சேவைகள் ஆணைக்குழு

26. மருந்துகள், நஞ்சுகள் மற்றும் போதைவஸ்துகள்

27. நீதி நிர்வாகம்

28. மத்திய அரசுக்கான கைத்தொழில் ஆராய்ச்சியும் பயிற்சியும்

29. தரநிர்ணயம் மேம்பாடு சம்பந்தமான ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகள்

30. ஆக்கவுரிமைகள், புத்தகக்காட்சிகள், வடிவமைப்புகள், பதிப்புரிமை, புலமைத்துவ வியாபாரக் குறிகள், வணிகக் குறிகள்.

31. ஏகபோகவுரிமை இணைப்புகள்

32. மத்திய தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு

33. மத்திய தொல்பொருள்கள் மற்றும் நூதனசாலைகள்

34. மத்திய விளையாட்டுத்துறையின் நிர்வாகம், உட்கட்டமைப்பு அபிவிருத்தி

35. இயற்கை அழிவு, பேரிடர் ஏற்படும் சந்தர்ப்பங்களில் தலையீடு செய்தல்

36. தொழில் தரம் மற்றும் ஒழுங்குபடுத்தல்கள்

37. பிரஜாவுரிமை

## 12. வெளியுறவுக் கொள்கை

12.1. வெளியுறவுக் கொள்கை மத்திய நிரலுக்குரிய விடயமாக இருக்கும். எப்படி இருப்பினும் மாநில நிரலுக்குரிய விடயம் ஒன்று வெளியுறவுக் கொள்கைத் தீர்மானத்திற்குரிய விடயமாக உள்ளபோது, மாநில அரசின் அத்தியாவசிய நலன்கள் மற்றும் அதிகாரங்கள் தொடர்பிலான குறித்த விடயம் பற்றி வெளியுறவுக் கொள்கைத் தீர்மானங்கள் எடுக்கப்படும்போது மாநில அரசு அதில் பங்கெடுக்கும். மாநில அரசுகளின் அதிகாரங்கள் பற்றியதாக ஒரு விடயம் உள்ளபோது, மாநில அரசின் பங்களிப்பு காத்திரமானதாக இருத்தல் வேண்டும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் மாநில அரசுகள் பொருத்தமான வகையில் சர்வதேச இணக்கப்பாடுகளில் பங்கெடுக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12.2. வடகிழக்கு மாநிலஅரசு தனது பொருளாதார, கல்வி, கலாச்சார நலன்களை ஊக்குவிக்கும் வகையில் மத்திய அரசுக்குரிய தூதுவராலயங்கள் உயர் ஸ்தானிகராலயங்களில் தனக்கான ஒரு அலகினை ஏற்படுத்திக் கொள்வதற்கான உரித்தினைக் கொண்டிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பின்னிணைப்பு - II

வட மாகாண சபை அரசியல் தீர்வு மற்றும் அரசியலமைப்பு முன்மொழிவுகள் அறிக்கையில் அதிகார பகிர்வு தொடர்பான உள்ளடக்கங்கள்:

வடமாகாண சபையின் மக்கள் பிரதிநிதிகளாகிய நாங்கள் அரசாங்கத்தால் தயாரிக்கப்படும் புதியஅரசியலமைப்போ அல்லது அரசியல் தீர்வுக்கான முன்மொழிவுகளோ பின்வரும் கொள்கை முன்மொழிவுகளை கருத்திற் கொள்ளல் வேண்டும் என இத்தால் முடிவு செய்கின்றோம்.

01. இந்தியாவில் மாநிலங்கள் மொழி ரீதியாகப் அமைந்திருப்பதுபோல, இலங்கையானது அடிப்படையில் இரண்டு பரந்த மாநிலங்களாக அதாவது பெரும்பான்மையாகத் தமிழ்ப் பேசும் பிரதேசத்தைக் கொண்ட வட மற்றும் கிழக்கு மாகாணங்கள் ஒரு மாநிலமாகவும் மற்றும் பெரும்பான்மையாகச் சிங்களம் பேசும் பிரதேசத்தைப் கொண்ட ஏனைய ஏழு மாகாணங்கள் மற்றொரு மாநிலமாகவும் பிரகடனப்படுத்தப்படல் வேண்டும். சிங்களம் பேசுவோரைக் கொண்ட மாநிலமானது அதனுள்ளே மேலும் பிரிக்கப்படல் வேண்டும் என்ற கேள்வியானது சிங்கள மக்களால் தீர்மானிக்கப்படல் வேண்டும்.

02.. வடக்கு - கிழக்கு மாநிலத்தில் ஒரு தன்னாட்சி தமிழ்ப் பேசும் முஸ்லிம்கள் அலகொன்றும், தமிழ்ப் பேசும் மலையகத் தமிழர்கள் நாட்டின் ஏனைய பகுதியில் ஓர் அலகாகவும் இனங்காணப்பட்டு, அங்கீகரிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்படல் வேண்டும்.

03. பெருநகருக்குரிய கொழும்புப் பிரதேசமானது தனியானதோர் நிர்வாகத்தைக் கொண்டுநாட்டின் தலைநகர அலகாக அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

04. மேலே தொடர்ச்சியாக இந்தஆவணத்தில் ஒப்பிக்கப்பட்டிருக்கும் வரலாற்று ரீதியான பின்புலம் மற்றும் 1833ஆம் ஆண்டுக்கு முன்னரும் பின்னருந் தமிழ்ச் சமூகத்தால் நூற்றாண்டுகளாகப் பேணப்பட்டுவந்த தனித்துவத் தன்மையின் அடிப்படையில் எந்தவொரு சமூகத்தைச் சேர்ந்த மக்களும் ஏனைய சமூகங்களில் ஆதிக்கம் செலுத்தவோ அல்லது அவர்களில் தங்கியிருப்பவர்களாக இருக்கும் வகையில் அவர்களைச் சார்ந்திருக்கவோ வேண்டியதில்லை என்பதை உறுதிசெய்து கொள்வதற்கும், ஒற்றையாட்சி முறைக்குரிய அரசாங்கத்துக்குப் பதிலாக கூட்டாட்சி சமஷ்டி முறைக்குரிய அரசாங்கமொன்றை நிறுவவேண்டியது அத்தியாவசியமாகின்றது. சர்வதேச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டங்கள் மற்றும் வரைவுறுதிகளின்படி தமிழர்கள் தாம் ஒருதேசிய இனம் எனக் கருதப்படுவதற்கான சகல தகமைகளையும் கொண்டிருந்தனர் என்ற உண்மை மறுதலிக்கப்படமுடியாதவை. இலங்கைப் பிரஜை ஒவ்வொருவரும் சட்டரீதியாக இன்னொருவருக்குக் கீழானவர் என அவனோ அல்லது அவளோ உணர்வதற்குரிய வழிமுறையை இல்லாதொழிப்பது உறுதி செய்யப்படவேண்டியது அத்தியாவசியமாகும். வெறும் எண்ணிக்கையில் பெரும்பான்மையாகவிருக்கும் அவனுக்கு அல்லது அவளுக்கு சமூகங்கள் சட்டரீதியாக ஏனையோருக்கு கூடுதலாக அளவுமீறிய அனுகூலங்களை வழங்கக் கூடாது.

05. இலங்கையில் தமிழ் பேசுவோரைக் கொண்டுள்ள வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்களினுள் தற்போதைய வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் ஒன்றிணைத்தலின் போது முஸ்லிம் தன்னாட்சி பிராந்திய சபையானது உருவாகும். இத்தன்னாட்சிப் பிராந்தியத்தின் நிலை, பரிமாணம் மற்றும் நியாயாதிக்க எல்லைகள் ஆகியன தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகளுக்கிடையில் கலந்துரையாடப்பட்டு முடிவு செய்யப்பட வேண்டும். மொழி ரீதியிலான தமிழ் பேசும் வடகிழக்கு மாநிலமானது மாநிலப் பாராளுமன்றத்தைக் கொண்டிருக்கும்.

06. ம்லையகத் தமிழர்களுக்காக அதேபோன்ற ஒழுங்குகள் சிங்களமொழி ரீதியான மாநிலத்தினுள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

07. அதிகாரமானது ஒரு சமூகத்தில் குவிக்கப்படும் அபாயத்தைத் தவிர்த்து அதிகாரங்கள் சகல சமூகங்களுக்கிடையேயும் சமனாகப் பகிரப்படுவதை முழு நாட்டினதும் பாராளுமன்றப் பிரதிநிதிகள் உறுதிசெய்தல் வேண்டும்.

08. எது எவ்வாறு இருப்பினும் வடகிழக்கு மாநிலம் மற்றும் முஸ்லிம் தன்னாட்சிப் பிராந்தியம் மற்றும் மலையகத் தமிழ் தன்னாட்சிப் பிராந்தியம் பாதிக்கத்தக்கவாறு மத்திய கூட்டாட்சி சமஷ்டிப் பாராளுமன்றத்தால் இயற்றப்படும் சட்டங்கள் உரிய மாநிலத்தாலோ அல்லது தன்னாட்சிப் பிராந்தியங்களாலோ அங்கீகரிக்கப்படாதவரை நடைமுறைக்கு வரக்கூடாது.

09. வடகிழக்கு மாநிலப் பாராளுமன்றம், வடகிழக்கு முஸ்லிம் பிராந்திய சபை அதேபோல் மலையகத் தமிழ்ப் பிராந்திய சபை ஆகியவற்றுக்கு தமது சொந்த அலுவல்களை மேற்கொள்வதற்கு ஏற்றவகையில் போதுமான அதிகாரங்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும். இப்பாராளுமன்றத்துக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிராந்திய சபைகளுக்கும் போதிய சுயாட்சியானது ஏற்பாடு செய்யப்படல் வேண்டும். இலங்கையைவிடப் பரப்பளவிலும் குடித்தொகையிலும் சிறியநாடாகிய சுவிற்சர்லாந்தில் நடைமுறையிலுள்ள கன்டோன் முறைமையானது அவசியமான மாற்றங்களுடன் இங்கு மேற்கொள்வதற்காகப் பரிசீலிக்கப்பட முடியும். தமிழ்ப் பேசும் மாநில அரசில் மத்தியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதி நிறைவேற்று அதிகாரம் எதனையும் கொண்டிருக்கமாட்டார். அவை மாநிலத்தின் அமைச்சரவையினாலேயே முழுமையாக தன்னுடமையாக்கப்படும்.

10. இலங்கையின் அரசகரும மற்றும் தேசிய மொழிகள் சிங்களமும் தமிழும் ஆவதுடன் ஆங்கிலமானது இணைப்பு மொழியாகவும் இருத்தல் வேண்டும். வடகிழக்கு மாநிலத்தில் சகல தொடர்புகள், பதிவுகள் மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகளும் சிங்களம் மற்றும் ஆங்கிலமொழி பெயர்ப்புகள் பேணப்பட்டு தமிழ் மொழியில் இருத்தல் வேண்டும். மலையகத் தமிழ்ப் பிராந்திய சபை தவிர்ந்த தீவின் மீதிப் பாகத்தில் பேணப்படும் சகல பதிவுகளும் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளும் தமிழ் மற்றும் ஆங்கிலமொழி பெயர்ப்புகள் பேணப்பட்டு சிங்களத்தில் இருத்தல் வேண்டும். மலையகப் பிராந்திய சபைகளில் பதிவுகள் பேணப்படுவதுடன் சிங்களம் மற்றும் ஆங்கிலமொழி பெயர்ப்புகள் பேணப்பட்டு நடவடிக்கைகள் தமிழில் மேற்கொள்ளப்படல் வேண்டும். நிதியியல் மற்றும் வேறு காரணங்களுக்காக உள்ளூர் மொழியிலும் மற்றும் ஆங்கிலத்திலும் மொழிபெயர்ப்பு பேணல் சாத்தியமற்றதாயின், உத்தியோகபூர்வ தேவைகளுக்கு உள்ளூர் மொழியைப் பாவிப்பதற்கு அமைய நாடு பூராகவும் ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பு பேணப்படலாம்.

11. புதிய அரசியலமைப்பொன்றை உருவாக்குகையில் தொடர்ச்சியாகவந்த மத்திய அரசாங்கங்களால் சுற்றயல் நிர்வாகங்களை வலிதற்றதாக்குவதன் பொருட்டு இதுவரை வேண்டுமென்றே மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் இல்லாதொழிக்கப்படல் வேண்டும்.

12. ஒவ்வொரு மாநில அரசாங்கத்தினதும் தன்னாட்சிப் பிராந்திய சபையினதும் சுயாட்சியானது கூட்டாட்சி சமஷ்டி அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

13. சகல பிரஜைகளுக்கிடையிலும் அவர்களுடைய மொழி, மதம், சாதி, கோட்பாடு அல்லது பிரதேசம் எவ்வாறிருப்பினும் சமத்துவக் கொள்கையானது வலியுறுத்தப்படுவதுடன் அரசியல், நிர்வாக, கல்வி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதார மற்றும் தொழில் அடங்கலாக ஏனைய சகல துறைகளிலும் சகல சமூகங்களுக்கும் மதிப்பளிப்பு ஏற்பாடு செய்யப்படல் வேண்டும். சமஷ்டி அரச சேவையில் சகல பிரஜைகளுக்கும் சமதொழில் வாய்ப்புகள் உறுதி செய்யப்படல் வேண்டும். இதற்காக சேவைகளுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படும்போது அது இன விகிதாசாரப்படி நடைபெறுதல் வேண்டும்.

14. ஒவ்வொரு மாணவரும் தேசிய மொழிகளிலும் இணைப்பு மொழியிலும் தேர்ச்சி பெற்றிருப்பதைக் கட்டாயமாக்குவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட அனுமதிக்கப்பட வேண்டும்.

15. குடியரசின் கொடியானது மக்கட் பிரிவுகளைப் பிரதிபலிக்கும் விதத்தில் இருப்பதை இல்லாதொழிக்கவேண்டும். தேசியகீதமானது சந்தர்ப்பத்துக்கு ஏற்ற வகையில் சிங்களத்திலோஅல்லது தமிழிலோ அல்லது இருமொழிகளிலுமோ பாடப்படல் வேண்டும்.

16. தமிழ் பேசும் மக்களுக்கு எதிரான அரச அங்கீகாரம் பெற்ற பாடசாலைப் புத்தகங்களினூடான திரிபுபடுத்தப்பட்ட நிகழ்ச்சிநிரலானது இல்லாதொழிக்கப்படல் வேண்டும். இலங்கையின் வரலாறானது இனப்பிரிவுசார் அல்லது குறுகிய மனப்பான்மைக் கோரிக்கைகளுக்குப் பணிந்திராது, சர்வதேசத் தராதரங்களுக்கு அமைவாக சரியாக வரையப்படல் வேண்டும்.

17. மாநில எல்லைகளுக்குட்பட்ட நிலங்கள் மாநில அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்கும் நோக்கெல்லைக்கும் கீழாக வருதல் வேண்டும். அந்நிலம் அப்பிரிவிலுள்ள மக்களின் நன்மைக்காகப் பயன்படுத்தப்படவுள்ளபோது சமஷ்டி கூட்டரசாங்கமானது மாநில அரசாங்கத்தின் அல்லது பிராந்திய சபையின் சம்மதம் அல்லது இசைவு இன்றி அந்நிலத்தின் மீது எந்த அதிகாரங்களையும் பிரயோகிக்க முடியாது.

18. மாநில அரசாங்கத்துக்கு முழுமையான பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படல் வேண்டும். சமஷ்டிக் கூட்டரசுக்குரிய பொலிசானது சமஷ்டிச் சட்டங்களின் அமுலாக்கத்தில் கவனம் செலுத்தல் வேண்டும்.

19. பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக) ஏற்பாடுகள் சட்டம் நீக்கப்பட்டு நாட்டின் பொதுவான குடியியல் சட்டமானது மீண்டும் கொண்டுவரப்படல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. புதியஅரசியலமைப்பு ஒழுங்குகள் இனம், மதம், மொழி, கோட்பாடு, சாதி மற்றும் பண்பாட்டைச் சார்ந்திராது சகல சமூகங்களுக்கிடையிலும் சமூக அக்கறையை உறுதிசெய்து தனிப்பட்ட பிரஜைகள் சட்ட விதிகளுக்கும் உரிமைகளுக்கும் சுய உரிமைகளுக்கும் மதிப்பளித்தலை மேம்படுத்தி பாராளுமன்ற ஜனநாயகத்தின் நேரான இலட்சியங்களைத் தொடர வழி அமைக்கப்படவேண்டும்.

21. நவீன கண்காணிப்பு முறைகளின் காரணமாக போர் முடிவுற்றமையைத் தொடர்ந்து வடக்கிலும் கிழக்கிலும் இராணுவப் படைகளைக் கண்காணிப்புப் பணிகளுக்காக நிலைநிறுத்த வேண்டிய அவசியப்பாடானது தேவைக்கு மிகையானது. முன்னாள் போராளிகளை பொது வாழ்க்கையினுள் மீளக் கொண்டு வருவதன் பொருட்டு படைக் குறைப்பு, படைக் கலைப்பு மற்றும் மீளவொருங்கமைத்தல் (டீனுசு) செயன்முறையானது மேற்கொள்ளப்படல் வேண்டும்.

22. அரசியலமைப்பொன்றை உருவாக்குவதற்காகப் பணிக்கப்பட்டுள்ள பெரும்பான்மைச் சமூகத்தினரைஅதிக எண்ணிக்கையில் கொண்டுள்ள அரசியலமைப்புச் சபை, அதன் பக்கச்சார்பான பிரதிநிதிகளின் தொகையை மனதில் வைத்து தேசிய பிரச்சினைக்கு நிரந்தரமானதும் நிலைத்திருக்கத்தக்கதுமானதோர் தீர்வை உறுதி செய்வதன் பொருட்டு, தமிழ் பேசும் மக்களின் தொடர்ச்சியான வரலாற்று ரீதியான வாழிடமாகவுள்ள பிரதேசங்களில் அவர்களின் தனித்துவத் தன்மைக்கு ஏற்றவகையில் அவர்களின் உரிமைகளை அங்கீகரிப்பதற்காக அரசாங்கத்துக்கும் தமிழ்த் தலைமைத்துவங்களுக்கும் இடையில் ஓர் ஆரம்ப இணக்கப்பாடானது எய்தப்படல் வேண்டும். இந்த இணக்கப்பாட்டில் தமிழ்த் தலைவர்கள் தமது மக்கள் சார்பாகக் கூறும் விடயங்கள் ஒருதலைப் பட்சமாக பெரும்பான்மை சிங்களம் பேசும் உறுப்பினர்களால் புறக்கணிக்கப்பட்டால் தமிழ்ப் பேசும் மக்கள் தமது வரலாற்று ரீதியான வாழ்விடங்களில் மக்கள் தீர்ப்பைப் பெற்று தமது அரசியல் நிலையை உறுதிசெய்வது சாத்தியமாதல் வேண்டும். அவ்வாறானதோர் இணக்கப்பாடானது ஐக்கியநாடுகள் சபை மற்றும் அல்லது ஏனைய நட்பு நாடுகளால் உத்தரவாதப்படுத்தப்படல் வேண்டும். இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழ்த் தலைவர்களுக்கும் இடையிலான ஆரம்ப பேச்சுவார்த்தைகள் பரஸ்பர உடன்பாட்டுடன் அமெரிக்கா, இந்தியா, ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான் மற்றும் ஏனைய நாடுகளின் பங்களிப்புடன் இடம்பெற வேண்டும் ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org